செ.வெ.எண்: 25 நாள்: 10.08.2017

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நீலகிரி மாவட்டலத்தில் 11.09.2017– அன்று கொண்டாடப்படுவதையொட்டி, விழாவின் ஒரு பகுதியாக மாண்புமிகு மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நினைவாகவும், உதகைக்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொது மக்களை மகிழ்விக்கும் வகையிலும், வரும் 11.08.2017 அன்று காலை 10.30 மணியளவில் உதகை படகு இல்லத்தில் படகோட்டிகளுக்கு படகுப்போட்டி நடத்தப்படவுள்ளது. படகுப் போட்டியினை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைக்கவுள்ளார். இந்நிகழ்ச்சியில் மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள், மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.